**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* பேசாமல் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

## (இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். *(குறுக்கீடு)* அறிக்கை கொடுக்கிறீர்களா, இல்லையா? Report-ஐக் கொடுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Report-ஐக் கொடுங்கள். *(குறுக்கீடு)* கொடுங்கள், கொடுங்கள், Report-ஐக் கொடுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** நான் அதைப் பற்றிப் பேசிவிட்டுக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுங்கள். Report-ஐக் கொடுங்கள். *(குறுக்கீடு)* இல்லை, Report-ஐக் கொடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரேயொரு point.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுங்கள். Report-ஐக் கொடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் 56-வது விதிப்படி இன்று விடுதலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுவின் அறிக்கைகளைக் கொடுங்கள் நீங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதை அனுமதிக்கிறீர்களா? இதைக் கொடுத்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, 56-வது விதியின்கீழ் வராது. நன்றி தெரிவிக்கும் தீர்மானம், இதிலே, debate-லே வராது அது. உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அப்படியென்றால் Zero hour-லே எடுத்துக்கொள்ளுங்கள். Zero hour-லே, முக்கியமான பிரச்சினை.

2007 ஜனவரி 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முடிந்தது, முடிந்தது. இரண்டு issue–விற்கு மேலே எடுக்க முடியாது. (குறுக்கீடு) முடிந்தது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இரண்டு issue–விற்கு மேலே எடுக்க முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அப்படியென்றால் சனிக்கிழமை எடுத்துக்கொள்ளலாம். சனிக்கிழமையாவது எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்க்கலாம். அதைப் பார்க்கலாம்.

*முற்பகல் 10–55*

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய பத்தொன்பது முதல் இருபத்து ஐந்து வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மனுக்கள் குழுத் தலைவர். (குறுக்கீடு)

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஒன்று முதல் ஆறு வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று